# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோயில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை- 600 018. தொலைபேசி எண்: 24347590

ஆணை நாள் 17.11.2020

**முன்னிலை**

**முனைவர் ரா.பிரதாப்குமார்**

**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 4892/B/18**

| | | |
|---|---|---|
| திரு R. பாஸ்கர் | | மேல்முறையீட்டாளர் |
| பொது தகவல் அலுவலர்,<br>மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),<br>மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.<br>புதுக்கோட்டை மாவட்டம். | எதிர் | பொது அதிகார அமைப்பு |

**ஆணை**

COVID-19 காரணமாக தமிழ்நாடு அரசால், ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் வைத்து நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (17.11.2020) தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு R. பாஸ்கர் மற்றும் பொது தகவல் அலுவலர், திரு அ. அக்பர் அலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ் 02.05.2018 தேதியிட்ட மனுவில், எனது புகார் மனுவின் மீது மாவட்ட வருவாய் அலுவலர் அலுவலகம் புகார் பதிவேட்டில் பதிவு செய்ததின் சான்றிட்ட நகல்கள் தொடர்பாக தகவல்கள் கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக பொது தகவல் அலுவலர் அவர்களுக்கு மனு செய்துள்ளார்.

3. தகவல்கள் வழங்கப்படாததால் மனுதாரர், 05.06.2018 தேதியிட்ட மனுவில் தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு விண்ணப்பித்துள்ளார். முழுமையான தகவல்களை பெற்றுத் தருமாறு தெரிவித்து, மனுதாரர் 03.07.2018 தேதியிட்ட இரண்டாவது மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டின் அடிப்படையில் தொலைபேசியின் வாயிலாக இன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக மனுதாரர் அவர்கள் தகவல் வழங்கப்படவில்லை என்றும், தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடவேண்டுமென்றும் தெரிவித்தார். தொலைபேசியின் வாயிலாக, மேற்படி பொது தகவல் அலுவலரை தொடர்பு கொண்டபோது, பொதுத் தகவல் அலுவலர் அவர்கள் கால அவகாசம் அளிக்கும் பட்சத்தில் 2 நாட்களுக்குள் மனுதாரருக்கு தகவல்களை வழங்கிவிடுவதாக விசாரணையின்போது உறுதியளித்தார். மேற்படி பொது தகவல் அலுவலரிடமிருந்து இந்நாள் வரை மனுதாரருக்கு வழங்கப்பட்ட

தகவல்கள் எதுவும் ஆணையத்திற்கு வராததால் இன்றைய விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட ஆணைகள் வழங்கப்படுக்கின்றன:-

1. சட்டப்பிரிவு 7ன்படி விண்ணப்பத்தை பெற்ற 30 தினங்களுக்குள் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களை முழுமையாக பொது தகவல் அலுவலர் தரக் கடமைப்பட்டவராவார். இந்நிலையில் அப்போதைய பொது தகவல் அலுவலர் ஏன் 30 தினங்களுக்குள் தகவலை மனுதாரருக்கு வழங்க தவறினார் என்பதற்கும் காலதாமதமாக தகவல் ஏன் அளிக்கப்பட்டது என்பதற்கும் அப்போதைய பொது தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 20(1)ன்கீழ் அதிகபட்ச தண்டமாக ரூ.25,000/- ஏன் விதிக்கக் கூடாது என்பதற்கு அவரது எழுத்து மூலமான விளக்கங்களை அவரிடமிருந்து இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் பெற்று இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு இன்றைய விசாரணையில் தொலைபேசியின் வாயிலாக ஆஜரான பொது தகவல் அலுவலர், திரு அக்பர் அலி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களுக்கு இதன்மூலம் உத்திரவிடுகிறது.
2. மனுதாரருக்குரிய முறையான தகவலை, இவ்வாணை கிடைக்கப் பெற்ற 5 நாட்களுக்குள் சட்டப்பிரிவு 7(6)ன்படி கட்டணமின்றி ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவுத் தபாலில் அனுப்பி வைத்து, மனுதாரர் ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகலுடன் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவலையும் இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து இவ்வாணை கிடைக்கப் பெற்ற 10 நாட்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்திரவிடுகிறது.

**ஒம்/-ரா.பிரதாப்குமார்**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 4892/B/18</u>**

**<u>பெறுநர்</u>**

பொது தகவல் அலுவலர்,
மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்.
புதுக்கோட்டை மாவட்டம்.

திரு R. பாஸ்கர்,
த/பெ ராஜரெத்தினம்,
175, மேலத்தெரு,
தச்சங்குறிச்சி,
கந்தர்வகோட்டை தாலுக்கா,
புதுக்கோட்டை மாவட்டம் 613 301.

Copy to: File
SCPA-19.11.20